செ.வெ.எண்: 31 நாள்: 13.11.2021

**பெரம்பலூர் மாவட்டம்**

**இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்க திருத்த முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ப.ஸ்ரீவெங்கட பிரியா இ.ஆ.ப. அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி பெரம்பலூர் மாவட்டத்தில் சிறப்பு சுருக்க திருத்த முகாம் இன்று(13.11.2021) நடைபெற்றதையொட்டி சிறப்பு சுருக்க திருத்த முகாம் நடைபெற்ற 147.பெரம்பலூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ராமகிருஷ்ணா மேல்நிலைப் பள்ளியில் அமைக்கப்பட்டிருந்த வாக்குச்சாவடி மையத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ப. ஸ்ரீவெங்கட பிரியா இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

**அதனைத்தொடர்ந்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது:**

147. பெரம்பலூர் சட்டமன்ற தொகுதியில் உள்ள 332 வாக்கு சாவடிகளில் மொத்தம் 3,00,795 வாக்களர்கள் உள்ளனர். இதில் 1,46,299 ஆண் வாக்காளர்களும், 1,54,474 பெண் வாக்காளர்களும், 22 இதர வாக்காளர்களும் உள்ளனர். 148. குன்னம் சட்டமன்ற தொகுதியில் உள்ள 320 வாக்கு சாவடிகளில் மொத்தம் 2,71,820 வாக்காளர்கள் உள்ளனர். இதில் 1,34,035 ஆண் வாக்காளர்களும், 1,37,772 பெண் வாக்காளர்களும், 13 இதர வாக்காளர்களும் உள்ளனர். ஆக பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள இரண்டு சட்டமன்ற தொகுதிகளிலும் மொத்தம் 5,72,615 வாக்காளர்கள் உள்ளனர். இதில் 2,80,334 ஆண் வாக்காளர்களும், 2,92,246 பெண் வாக்காளர்களும், 35 இதர வாக்காளர்களும் உள்ளனர்.

இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுரைப்படி, இந்திய தேர்தல் ஆணையம் 01.01.2022-ஐ தகுதி நாளாக கொண்டு 18 வயது பூர்த்தியடைந்துள்ள நபர்களை வாக்காளர் பட்டியலில் சேர்ப்பதற்கும், வரைவு வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல் மற்றும் பெயர் திருத்தம், பெயர் நீக்கல், முகவரி திருத்தம் உள்ளிட்ட திருத்தங்கள் மேற்கொள்ளவும் 01.11.2021 முதல் 30.11.2021 வரை விண்ணப்பங்கள் பெற ஆணையிட்டுள்ளது.

அதனடிப்படையில் வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்க திருத்த பணிக்காக சிறப்பு முகாம்கள் 13.11.2021 (சனி) இன்று நடைபெற்றது. மேலும், எதிர்வரும் 14.11.2021 (ஞாயிறு), 27.11.2021 (சனி), மற்றும் 28.11.2021 (ஞாயிறு) ஆகிய நாட்களில் சம்மந்தப்பட்ட வாக்குசாவடி மையங்களில் நடைபெற உள்ளது.

மேலும், வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க பெறப்படும் விண்ணப்பங்கள் உரிய முறையில் பூர்த்தி செய்து தேவையான ஆவணங்கள் இணைக்கப்பட்டுள்தை உறுதி செய்து பெற வேண்டும் எனவும், பெறப்பட்ட விண்ணப்பங்களை உரிய காலத்தில் கள ஆய்வு மேற்கொண்டு வாக்காளர் பட்டியலில் புதிய வாக்காளர்களின் பெயர்களை சேர்த்திட நடவடிக்கை மேற்கொள்ள சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ப.ஸ்ரீவெங்கட பிரியா இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

இந்த ஆய்வின்போது வருவாய் கோட்டாட்சியர் திருமதி நிறைமதி சந்திரமோகன், நகராட்சி ஆணையாளர் திரு. குமரிமன்னன், பெரம்பலூர் வட்டாட்சியர் திரு.கிருஷ்ணராஜ் மற்றும் அரசு அலுவலர்கள் உடன் இருந்தனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், பெரம்பலூர்.